## சுய வேலைவாய்ப்புப் பயிற்சிகள்

| வ. எண். | பயிற்சியின் பெயர் | பயிற்சிக் காலம் | பயிற்சிக் கட்டணம் | கல்வித் தகுதி |
|---|---|---|---|---|
| 1 | கறவைமாட்டுப் பண்ணையம் | 15 நாட்கள் | 3,000/– | தமிழில் எழுத, படிக்கத் தெரிந்திருக்க வேண்டும் |
| 2 | செம்மறியாடு வளர்ப்பு | 15 நாட்கள் | 3,000/– | |
| 3 | வெள்ளாடு வளர்ப்பு | 15 நாட்கள் | 3,000/– | |
| 4 | பசுந்தீவனம் மற்றும் விதை உற்பத்தி | 15 நாட்கள் | 3,000/– | |
| 5 | உறைமோர் மூலம் பால் பொருட்கள் தயாரித்தல் | 15 நாட்கள் | 3,000/– | 10 ஆம் வகுப்புத் தேர்ச்சி |
| 6 | கால்நடைப் பண்ணைக் கழிவினைப் பயன்படுத்துதல் | 15 நாட்கள் | 3,000/– | தமிழில் எழுத, படிக்கத் தெரிந்திருக்க வேண்டும் |
| 7 | முயல் வளர்ப்பு | 15 நாட்கள் | 3,000/– | |
| 8 | வெண்பன்றி வளர்ப்பு | 15 நாட்கள் | 3,000/– | |
| 9 | ஜப்பானியக் காடை வளர்ப்பு | 15 நாட்கள் | 3,000/– | |
| 10 | நாட்டுக்கோழி வளர்ப்பு | 15 நாட்கள் | 3,000/– | |

மேற்கூறிய பயிற்சிகளுக்கு ஆண்டு முழுவதும் சேர்க்கை நடைபெறுகிறது. பயிற்சிகளுக்கான விண்ணப்பத்தை **www.tanuvas.ac.in / www.tanuvasdde.in** என்ற இணையதள முகவரியில் இருந்து பதிவிறக்கம் செய்து, பூர்த்தி செய்த விண்ணப்பம், தகுதி சான்றிதழ் நகல் மற்றும் பயிற்சிக்கான கட்டணத்துடன் தங்கள் மாவட்டத்தில் அமைந்துள்ள தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகத்தின் பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையத்தை அணுகவும்.

### மேலும் தகவல்களுக்கு


தொலைநிலைக் கல்வி இயக்ககம்
தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக் கழகம்
பழைய எண்.327/புதிய எண்.485, அண்ணா சாலை, நந்தனம், சென்னை–35
தொலைபேசி எண்: 044–2432 0411
இணையதளம்: www.tanuvasdde.in


## தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகம்

# தொலைநிலைக் கல்வி இயக்ககம்

## தகவல் கையேடு





தொலைநிலைக் கல்வி இயக்ககம்
தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகம்
பழைய எண்.327/புதிய எண்.485, அண்ணா சாலை, நந்தனம், சென்னை – 35
தொலைபேசி எண்: 044–2432 0411


**2025**

# தொலைநிலைக் கல்வி இயக்ககம்

தொலைநிலைக் கல்வி இயக்ககம் பண்ணையாளர்கள், பண்ணை மகளிர், பள்ளிப் படிப்பைத் தொடர இயலாதவர்கள், கால்நடை மருத்துவர் போன்றோர்களுக்குப் புத்தக முறை மற்றும் இணைய வழியில் கால்நடைப் பராமரிப்பு மற்றும் கால்நடை அறிவியல் கற்றல் வாய்ப்புகளைப் பெறும் வகையில் செயல்பட்டு வருகிறது.

## தொழில்நுட்ப குறிக்கோள்

- பல்கலைக்கழகத்தின் அனைத்துத் தொலைநிலைக் கல்விப் பயிற்சிகளையும் நடத்துதல்
- கால்நடை மருத்துவர்கள் மற்றும் அறிவியல் பட்டதாரிகளுக்குத் தொலைநிலைக் கல்வியில் முதுநிலைப் பட்டயப் படிப்புகளை வழங்கல்
- பல்கலைக்கழகத்தின் செயல்திறன் மேம்பாடு மற்றும் சுய வேலைவாய்ப்புப் பயிற்சிகளை ஒருங்கிணைத்து நடத்துதல்
- பெருகிவரும் தேவைகளுக்கு ஏற்ப புதிய தொலைநிலைக் கல்விப் பயிற்சிகளை அறிமுகப்படுத்துதல்

## பல்கலைக்கழக நூல் வெளியீட்டுப் பிரிவு

மாதவரம் பால்பண்ணை வளாகத்தில் தொலைநிலைக் கல்வி இயக்ககத்தின் கீழ் இயங்கி வரும் நூல் வெளியீட்டுப் பிரிவு அச்சகத்தில் தொழில் நுட்பப் புத்தகங்கள், வானொலி வேளாண் பள்ளிப் புத்தகங்கள், தொழில்நுட்பக் கையேடுகள், சிறிய புத்தகங்கள் மற்றும் பல்கலைக்கழக விண்ணப்பப் படிவங்கள், பல்கலைக்கழக விண்ணப்பக் குறிப்புப் புத்தகம், பதிவேடுகள், அட்டைகள், ஆண்டறிக்கை, விடைத்தாள் மற்றும் தொலைநிலைக் கல்விக்கு உண்டான புத்தகங்கள் முதலியவற்றை அச்சடிப்பது முக்கியக் குறிக்கோளாகும்.

இந்நூல் வெளியீட்டுப் பிரிவு அச்சகத்தில் இருந்து தொழில்நுட்பப் புத்தகங்கள், விவசாயிகள் மற்றும் பயனீட்டாளர்கள் பயன்பெறும் வகையிலான புத்தகங்கள் விற்பனை செய்வதற்காகப் பல்வேறு மையங்களுக்கு அனுப்பி வைக்கப்படுகின்றன. இவை மட்டுமல்லாமல் சில புத்தகங்கள் மறுபதிப்பும் செய்யப்படுகின்றன.

இந்நூல் வெளியீட்டுப் பிரிவில் மறுதோன்றி அச்சு இயந்திரம் (ஆப்செட்), தாள் வெட்டும் இயந்திரம் (பேப்பர் கட்டிங்), ஹாட் மெல்ட் கட்டு செய்யும் இயந்திரம் (பைண்டிங்), டிரிடில் அச்சு இயந்திரம், தாள் (பேப்பர்) மடிப்பு இயந்திரம், பின்னிங் இயந்திரம், புத்தகம் அழுத்தும் இயந்திரம், லேமினேஷன் இயந்திரம் முதலியவை மூலம் அச்சக வேலை நடைபெற்று வருகிறது.

## தொலைநிலைக் கல்வி வாயிலாக அளிக்கப்படும் முதுநிலைப் பட்டயப் படிப்புகள் (இணைய வழி)

22 முதுநிலைப் பட்டயப் பாடத்திட்டங்கள் முறையே மறு சீரமைப்பு மருத்துவச் சிகிச்சை, சிறிய பிராணிகள் நுண்ஒலிப் பரிசோதனை, முதுநிலை பட்டயம் – கறவை மாடுகளில் மலட்டுத் தன்மையும் அதன் மேலாண்மையும், வன விலங்கு நோய் மேலாண்மை, விலங்கு வழி மனிதர்களிடையே பரவும் நோய்கள், கால்நடை மருத்துவ நோய்களை ஆய்வகச் சோதனைவழிக் கண்டறிதல், கால்நடை நலப் பொருளாதாரம், கால்நடை உடலக உள்நோக்கு ஆய்வு, மரபுசார் கால்நடை மருத்துவம், கால்நடைவழி நவீன இனப்பெருக்க உயிர்த்தொழில்நுட்பம், இறைச்சி தொழில்நுட்பம் மற்றும் இறைச்சி / இறைச்சிப் பொருட்கள் தர உறுதி, பண்ணைக் கழிவு மேலாண்மை, பால் பதப்படுத்துதல் மற்றும் தர உறுதி, கால்நடைத் தீவன உற்பத்தித் தொழில்நுட்பம் மற்றும் வணிக முறையில் கோழி வளர்ப்பும் பராமரிப்பும், சிறிய கால்நடைகளின் தோல் மருத்துவம், விலங்கு நலம், ஆய்வக விலங்கு அறிவியல், பெரிய அசைபோடும் விலங்குகளின் இனப்பெருக்க ஆய்வு முறைகள், உயிர் தகவலியல், பயன்பாட்டு உயிர் புள்ளியியல், பசுந்தீவன உற்பத்தி மற்றும் மேய்ச்சல் நில மேலாண்மை ஆகிய பாடத்திட்டங்கள் இணைய வழியில் தொலைநிலைக் கல்வி இயக்ககம் வாயிலாகக் கால்நடை மருத்துவப் பட்டதாரிகள் / அறிவியல் பட்டதாரிகளுக்கு ஓராண்டு (இரு பருவங்கள்) பாடத்திட்டமாக வழங்கப்பட்டு வருகிறது. விவரங்கள் அறிய விரும்புவோர் **www.tanuvasdde.edu.in** இணையதள முகவரி வாயிலாக அறிந்துகொள்ளலாம்.

## திறன்ஊக்கப் பயிற்சிகள் மற்றும் சுய வேலைவாய்ப்புப் பயிற்சிகள்

திறன்ஊக்கப் பயிற்சிகள் மற்றும் சுய வேலைவாய்ப்புப் பயிற்சிகள் 2011 ஆண்டு முதல் செயல்பாட்டில் உள்ளன.

### செயல்திறன் மேம்பாட்டுப் பயிற்சிகள்

| வ. எண். | பயிற்சியின் பெயர் | பயிற்சிக் காலம் | பயிற்சிக் கட்டணம் | கல்வித் தகுதி |
|---|---|---|---|---|
| 1 | பால் பண்ணை உதவியாளர் | 15 நாட்கள் | 3,000/– | தமிழில் எழுத, படிக்கத் தெரிந்திருக்க வேண்டும் |
| 2 | பால் பதன நிலைய உதவியாளர் | 30 நாட்கள் | 10,000/– | 10 ஆம் வகுப்புத் தேர்ச்சி |
| 3 | பால் மற்றும் பால் பொருட்கள் தரக் கட்டுப்பாடு உதவியாளர் | 15 நாட்கள் | 5,000/– | |
| 4 | தீவன ஆலை மேற்பார்வையாளர் | 15 நாட்கள் | 3,000/– | தமிழில் எழுத, படிக்கத் தெரிந்திருக்க வேண்டும் |
| 5 | தீவனப் பகுப்பாய்வுத் தொழில்நுட்ப உதவியாளர் | 45 நாட்கள் | 15,000/– | இளம் அறிவியல் பட்டம் (இயற்பியல், வேதியியல், தாவரவியல், விலங்கியல்) அல்லது ஏதேனும் ஒரு இளங்கலைப் பட்டத்துடன் பகுப்பாய்வில் அனுபவம் |
| 6 | கால்நடைப் பண்ணை மேலாளர் | 30 நாட்கள் | 5,000/– | +2 ஆம் வகுப்புத் தேர்ச்சி |
| 7 | கோழிப் பண்ணை மேலாளர் | 30 நாட்கள் | 5,000/– | |
| 8 | குஞ்சுப் பொரிப்பக மேற்பார்வையாளர் | 15 நாட்கள் | 3,000/– | 10 ஆம் வகுப்புத் தேர்ச்சி |
| 9 | கோழிப் பண்ணை மேற்பார்வையாளர் | 15 நாட்கள் | 3,000/– | |
| 10 | கோழியின தடுப்பூசி மற்றும் அலகு வெட்டுதலின் தொழில்நுட்பம் | 15 நாட்கள் | 3,000/– | 8 ஆம் வகுப்புத் தேர்ச்சி |